DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.198/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

-----------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செந்தில்குமார் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.பெருமாள் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 01.06.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1.நான் தற்பொழுது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக செய்யாறு வட்டார போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்த போது காவல் உதவி ஆய்வாளர் ஆர்.எஸ்.மங்கலம் அவர்களின் வேண்டுகோளின்படி குற்ற எண்.09/2023 பிரிவு 279, 337 இ.த.ச வழக்கின்படி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட TN 63 AM 3333 என்ற Toyoto innova Lmv car 24.01.2023ல் நண்பகல் 02.00

மணியளவில் வட்டார போக்குவரத்து அலுவலகம் இராமநாதபுரத்தில் வைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின்போது கீழ்கண்ட சேதாரங்கள் காணப்பட்டன.1.முன்புற இடது பம்பர் சேதமடைந்திருந்தது 2. முன் இடது முகப்பு விளக்கு, இன்டிகேட்டர் சேதமடைந்திருந்தது. 3.முன் இடது Wheel fender சேதமடைந்திருந்தது. இவ்விபத்தினால் சேதமடைந்த வாகனம் ஓட்டி பார்க்கும் நிலையில் இல்லை. நிலை ஆய்வில் கைத்தடை அமைப்பு மற்றும் கால் தடை அமைப்பு சரியாக இருந்தது. எனது ஆய்வின்போது இவ்விபத்து இவ்வாகனத்தின் எந்தவித இயந்திர கோலாறு காரணமாகவும் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. இதே வழக்கில் தொடர்புடைய மற்றொரு வாகனமான TN 65J8755 tvs Star sports இருசக்கர வாகனம் 25.01.2023 நண்பகல் 02.15 மணியளவில் வட்டார போக்குவரத்து அலுவலகம் இராமநாதபுரத்தில் வைத்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது முன்புற முகப்பு விளக்கு சேமடைந்திருந்தது. முன் வலது இன்டிகேட்டர் சேதமடைந்திருந்தது. முன்புற Speedo meter சேதமடைந்திருந்தது. முன்புற fork சேதமடைந்திருந்தது. இவ்விபத்தினால் சேதமடைந்த வாகனம் ஓட்டி பார்க்கும் நிலையில் இல்லை. நிலை ஆய்வில் கைத்தடை அமைப்பு மற்றும் கால் தடை அமைப்பு சரியாக இருந்தது. எனது ஆய்வின்போது இவ்விபத்து இவ்வாகனத்தின் எந்தவித இயந்திர கோலாறு காரணமாகவும் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் வைத்து நான் ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக மோட்டார் வாகன விதிகளின் படி சம்பவ இடத்தில் வைத்து தான் வாகனத்தை ஆய்வு செய்யவேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்தால் தான் வாகனத்தின் டயர் மார்க்கை பார்க்க முடியும் என்றால் சரிதான்.பொதுவாக முன்னால் செல்லும் இருசக்கர வாகனத்தை பின்னால் வரும் நான்கு சக்கர வாகனம் இடித்தால் இரு சக்கர வாகனத்தின் இன்டிகேட்டர், டெயில்லைட் சேதமடைய வாய்புள்ளது என்றால் அது இடிக்கும் தன்மையை பொறுத்து இரு சக்கர வாகனத்தின் பின்னால் உள்ள இன்டிகேட்டர், டெயில்லைட், பின்னால்

உள்ள பம்பர் ஆகியவை சேதமடையவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனமும், நான்கு சக்கர வாகனமும் நேருக்குநேர் மோதிக்கொண்டால் நான்கு சக்கர வாகனத்தின் வலது பக்கம் சேதமடைய வாய்புள்ளது என்றால் சரிதான். நான்கு சக்கர வாகனத்தின் வலது பக்கம் எந்தவித சேதமும் இல்லையென்றால் சரிதான் இடதுபக்கம் மட்டும் தான் சேதமிருந்தது. பொதுவாக 500 மீட்டர் முன் செல்லும் வாகனத்தின் விளக்கு வெளிச்சத்தை கொண்டு பார்க்க முடியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.